# கண்ணியம்

ஆசிரியர். முனைவர். ஆ.கோ. குலோத்துங்கன், டி.லிட்

சமூக கலை இலக்கியத் திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2032



மொழிக்காவலர் **சி. இலக்குவனார்**
1914 - 1973


செப்டம்பர் 2001

விலை : ரூ. 5-00

மலர் 11

இதழ் 5

அட்டையில்

நெஞ்சின் நினைவுகள்



## மொழிப்போர் மறவர் இலக்குவனார்

தமிழ் இன உணர்வாளர்கள், தமிழுக்காக உண்மையாகத் தொண்டாற்றுபவர்கள் தமிழ் இலட்சியவாதிகள், தமிழ்க் கொள்கைவாதிகள் ஆகியோர் எனக்கு இளமையிலிருந்து பிடிக்கும். அவர்களிடம் என்னை அறியாமலே ஒரு பற்றும், பாசமும் பிறக்கும். அந்த தமிழ் உணர்வாளர்களில் என் நெஞ்சில் இடம் பெற்றர்வர்களில் தமிழ்ப் போர் மறவர் – தமிழ் இனக் காவலர் சி. இலக்குவனாரும் ஒருவர்.

இலக்குவனார் அவர்களை வைத்து சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் செந்தமிழ்க்கவிஞர் எழுத்தாளர் பேரவையின் அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அதில் டாக்டர் இலக்குவனார் டாக்டர் ந. சஞ்சீவி, சிறுவை மோகன சுந்தரம், கவிக்கொண்டல் செங்குட்டுவன், மா.சு. சம்மந்தம் போன்ற தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர். அதில் நானும் கலந்துக் கொண்டேன். அந்த கூட்டத்தில் தலைவராக சி. இலக்குவனாரும் செயலாளராக சிறுவை மோகன சுந்தரமும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் நினைவு. அதில் தலைமைச் செயற்க்குழு உறுப்பினராக என்னையும் இணைத்துக் கொண்டார்கள். அதன்மூலம் அவரிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு கிடைத்தது. அதன்பின்னர் என் திருமணம் நடை பெற்றது. அத்திருமணத்திற்கு அவர் வர இயலாது போனாலும் மறவாமல் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

ஒருமுறை ஒரு நிகழ்ச்சியின் காரணமாக ஐதராபாத் சென்றிருந்தேன். அப்பொழுது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு வருவதற்குள் இரவு 7மணி ஆகிவிட்டது. அப்பொழுது இலக்குவனார் அவர்கள் உஸ்மானியர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இலக்குவனாரைப் பார்க்க வேண்டும் என விரும்பி நண்பர்களை அழைத்துக் கொண்டு உஸ்மானியர் பல்கலைக் கழகத்திற்குள் அமைந்துள்ள அவர் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றேன். என்னைப் பார்த்தம் இலக்குவனார் அன்புள்ளத்தோடும், இனிமையோடும் வரவேற்றார். அவர் அன்பின் திறன் கண்டு நெகிழ்ந்துப் போனேன் . நீண்ட நாட்களுக்குப் பின் அவரைச் சந்தித்ததால் தமி ழ், தமிழ்நாடு தமிழ் இனம் என்பது பற்றியெல்லாம் உணர்ச்சியோடு பேசினார். அந்த காட்சிகளை இன்றும் முன்னால் காணுகின்றேன். அந்தத் தமிழ் உணர்வாளரை அட்டையில் வெளியிட்டு அவருடைய மகனையே நேர்காணல் கண்டு கண்ணியத்தில் இன்றைய தலை முறைக்கும் அவரைப் பற்றி தெரிய வேண்டும். என்று கண்ணியத்தில் வெளியிட்டுள்ளேன். அவரைப் போன்று இன உணர்வும் மொழி உணர்வும் தமிழர்களாகிய நாமெல்லாமே பெற்றிட வேண்டும். இலக்குவனாரை போற்றும் வகையில் அவருடை நூல்களை நாட்டுடைமையாக்கிட வேண்டும். அரசு ஆவன செய்யுமா ?

–ஆ.கோ. குலோத்துங்கன்

மூட நம்பிக்கை மனிதரின் கொடிய வியாதி – ஹேரக்கல்.



## செந்தமிழ்க் காவலர் சி. இலக்குவனார்

*(தமிழறிஞர் சி. இலக்குவனார் அவர்களின் திருமகனார் பேராசிரியர் இ. மறைமலை அவர்களுடன், 'கண்ணியம்' இதழுக்கான ஒரு நேர் காணல். நேர்காணல்நிகழ்த்தியவர் : இ. சிகாமணி, எம்.ஏ., எம்.எட்.,)–ஆசிரியர்.*

**வினா :** உங்கள் தந்தையாரைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?

**விடை :** மகன் என்ற முறையில் மட்டுமில்லாமல் ஒரு தமிழன் என்ற முறையிலும் அவர் பெரிதும் போற்றத்தக்கவர். தமது குடும்ப நலனை எஞ்ஞான்றும் கருத்தில் கொண்டதில்லை. தமிழ் நலன், தமிழர் நலன், என்பதுவே அவரது குறிக்கோள்களாக திகழ்ந்தன.

**வினா :** உங்கள் பட்டறிவில் சில எடுத்துக் காட்டுகளைக் கூறலாமே ?

**விடை :** நண்பர்களையும், விருந்தினர்களையும் சந்திக்கும் பொழுது குடும்பக் கதைகளை அவர் பேசி நான் அறியேன், மற்றவர்கள் நலனை உசாவும் பொழுது கூட அவர் தமிழுணர்வுடன் இருக்கிறாரா ? என்றுதான் முதலில் வினவுவார். இதற்கு நிறைவளிக்கும் விடை கிடைத்தால் அவரது குடும்ப நலனை உசாவுவார். அத்தகைய விடை கிடைக்காவிட்டால் வேறு செய்திகளுக்கு மாறிவிடுவார். தஞ்சையில் மாவட்ட நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர் பொறுப்பு ஏற்ற காலையும், திருவையாறு அரசர் கல்லூரி பாபநாசம் தமிழ்க் கல்லூரி திருநெல்வேலி இந்துக் கல்லூரி, மதுரை தியாகராச கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி , ஐதராபாத் உசுமானியா பல்கலைக் கழகம், எனப் பல்வேறு நிறுவனங்களில் பேராசிரியர் பணி, மற்றும் முதல்வர் பணி, புரிந்த காலையும், அவர் உழைத்த விதம், இன்றைய பேராசிரியர்களுள் ஒரு முன் மாதிரியாகக் கொள்ள வேண்டிய ஒன்று எனலாம். கல்லூரி நேரங்களில் மாணவர்களுக்கு சங்கத் தமிழின் சால்பையும், திருக்குறளின் மேன்மையையும், சிலம்பின் சீர்மையையும், தண்டமிழ்ப் புலவர்களின் தகைமையையும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைப்பார்.

அலுவல் நேரம் தவிர ஏனைய நேரங்களில் தாம் பணியாற்றிய ஊர்களில் தமிழ் மன்றங்கள் அமைத்து பொதுமக்களுக்கு இலவச வகுப்புகள் மூலம் இலக்கியங்களை பயிற்றுவிப்பார். இன்றைய மாலைநேர கல்லூரிகளுக்கு முன்னோடியாக அவரது இன்றைய இலக்கிய விளக்கப் பணிகளைக் குறிப்பிடலாம். இது போக இதழ்களை இலக்கிய விளக்கப் பணிகளைக் குறிப்பிடலாம். இது போக இதழ்களை நடத்தி, இதழ்களின் மூலம், தமிழ் நல்லுலகம் எங்கும் தமது கருத்துகளைப் பரப்புவார். வகுப்பு, பொதுமேடை, இதழ் என்னும் மூன்று துறைகளிலும் நாள்தோறும் அயராது உழைத்த அவர் உழைப்புக்கு ஈடு இணையாக வேறு எந்தப் பேராசிரியர் உழைப்பையும் கூறமுடியாது.

**வினா :** நீங்கள் கூறும் விடை உங்கள் பேராசிரியர் நிலையிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அருள் கூர்ந்து நீங்கள் ஒரு பேராசிரியர் என்பதை மறந்து விட்டு ஒரு மகன் என்ற முறையில் உங்கள் தந்தையார் பற்றி கூறவும்.

**விடை :** நாங்கள் மொத்தம் பதினொருர்; ஆறுபுதல்வர்கள், ஐந்து புதல்விகள் அனைவரிடமும் சமமான அன்பையே செலுத்தினார். தந்தை என்ற முறையில் விட்டு

ஈகை குணமில்லாத செல்வன் ஒரு போக்கிரி – பீல்டிங்

விலகி நில்லாமல் தோழர் என்ற முறையில் ஒட்டி உறவாடுவார். தவறு கண்டவிடத்து உரத்தக் குரலில் ஓங்கிக் கண்டிப்பார். குறள் கூறும் நெறி குணம் என்னும் குன்றேறி நின்றவர் அவர். எனவே அவர் வெகுளிகுணம் கடைப்பொழுதில் மறைந்துவிடும்.

வினா : அவருடன் நீங்கள் என்றேனும் முரண்பட்டதுண்டா ?

விடை : திருநெல்வேலியில் பணி புரிந்த காலத்தில் தமிழ் ஞாயிறு மறைமலையடிகள் எங்கள் இல்லத்திற்கு வந்து விருந்தாடிச் சென்றார். அஞ்ஞான்று என் அன்னையார் கருவுற்றிருந்த காலமாகும். அவர் வருகையைச் சிறப்பிக்கும் பொருட்டும். அவர்மீது கொண்டுள்ள ஈடுபாட்டின் காரணமாகவும் பிறக்கும் குழந்தை ஆண்மகவு ஆயின் "மறைமலை" எனப் பெயரிடவும், அக்குழந்தைக்கு தமிழ் இலக்கியக் கல்வியளித்து தமிழ்ப் பேராசிரியர் பணிக்கு அனுப்ப வேண்டுமெனவும் என் தந்தையார் கருதியிருந்தார். அப் பெறற் கரும் பேறே எனக்கு வாய்த்தது என்பதே என் மழலைப் பருவத்தில் எனக்குத் தெரியாத ஒன்று. பள்ளிப் படிப்பை முடித்து புகுமுக வகுப்பிலும் தேர்ச்சி பெற்று பட்டப்படிப்பைத் தொடருங்கால் என்னை, தமிழ் இளங்கலை பயிலுமாறு அவர் பணித்தார். வீட்டில் நாள்தோறும் தமிழ் நூல்களைப் பயிலும் வாய்ப்பு பெற்றுள்ளமையாலும் தந்தையார் நடத்தும் வகுப்புகளில் பாடங் கேட்கும் வாய்ப்பு பெற்றுள்ளமையாலும் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயில்வது அத்துணை முதன்மையாக எனக்கு அப்பொழுது படவில்லை. எனவே தமிழ் இளங்கலை வகுப்பில் சேர்வதற்கு மறுத்துவிட்டேன். இளமறிவியல் வகுப்பில் விலங்கியல் சிறப்புப் பாடத்திற்கு விண்ணப்பித்து இடமும் பெற்றுவிட்டேன். அப்பொழுது என் தந்தையார் ஏமாற்றம் அடைந்தார் என்றே கூறவேண்டும். மறைமலை என்று பெயர் வைக்கப்பட்டதற்கு காரணம் அதன்பிறகுதான் எனக்கும் தெரியவந்தது. அறிவியல் கட்டுரைகள் பலவற்றை மாணவப் பருவத்திலேயே எழுதி வந்தேன். என் தந்தையார் நடத்திய குறள்நெறி இதழிலும், செந்தமிழ்ச் செல்வியிலும், சிறப்பு மலர்கள் பலவற்றிலும், வெளியிடப்பெற்ற அக்கட்டுரைகளைக் கண்டு என் தந்தையார் பெரிதும் மகிழ்ந்தார். செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்த அறிவியல் அறிஞர் இராமலிங்க அடிகளார் என்னும் கட்டுரையும், தியாகராசர் கல்லூரி ஆண்டு மலரில் வெளியிடப்பெற்ற "தொய்வகம்" என்னும் கட்டுரையையும் என் தந்தையார் பலரிடமும் பாராட்டி மகிழ்ந்தது இன்னும் என் மனக் கண்முன் நிழலாடுகிறது. விலங்கியல் தொடர்பான கட்டுரைப் போட்டிகளில் பரிசுகளையும் பெற்றேன் எனினும் என்னால் செய்முறைகளை (Practical) சிறப்பாகச் செய்ய முடியவில்லை. இதன் விளைவாக விலங்கியல் முதுகலை பயில்வதைக் கைவிட்டேன். குறள்நெறி இதழில் அவ்வப்பொழுது எழுதி வருவதும், மாணவர் அரங்கில் சொற்பொழிவு நிகழ்த்துவதும் என் தமிழ்க்கல்வி ஆர்வத்துக்கு மேலும் உரமூட்டின எனலாம். இதன் பின்னர் என் தந்தை பெரிதும் மகிழும் வண்ணம் தமிழ் முதுகலை வகுப்பில் சேர்ந்தேன். இவ்வொன்றைத் தவிர வேறு எந்த வகையிலும் என் தந்தையாரோடு நான் முரண்பாடு கொண்டதில்லை.

வினா : உங்கள் உடன் பிறப்புகளைப் பற்றி கூறுங்களேன்... ?

விடை : என் தந்தையாரின் மூத்தமகன் எங்கள் அன்புத் தமையனார் இ. திருவேலன் அவர்கள் பொறியியல் கல்வி பயின்று கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் சிறப்பானதொரு பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். 1973ல் என் தந்தை மறைவுக்குப்பின்

அன்புக்கு எல்லையே இல்லை – ஜான்கிட்ஸ்





இ. சிகாமணி

குடும்பத்தில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவுக்கு முட்டுக் கொடுக்கும் வகையில் தம் துணைவியாரையும், மக்களையும் இந்தியாவிலே விட்டுச் செல்ல நேரினும் தியாக உள்ளத்தோடு பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் பணியேற்றார். இதன் விளைவாக லிபியா, செருமன், இலண்டன், சப்பான் என்ற பல்வேறு நாடுகளுக்கு அவர் அலைய நேரிட்டாலும் ஐந்து தங்கைகளின் திருமணத்தைச் சிறப்புற நடத்த முடிந்தது. அவரது புதல்வி திருமதி மீனா மலர்க்கொடி மருமகன் உதய சங்கர் ஆகியோர் அமெரிக்காவில் பணியாற்றி வருகின்றனர். அவரது புதவர் திரு. முத்துவேலன் சப்பான் நிறுவனம் ஒன்றில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான விற்பனை மேலாளராகப் பணிபுரிந்து வருகின்றார். கடல் நீரை குடி நீராக்கும் இயந்திரம் மருத்துவமனைக் கழிவை எரித்து தூய்மையாக்கும் இயந்திரமும் இந் நிறுவனத்தின் சிறப்புமிக்க படைப்புகளாகும். நான் இரண்டாவது மகன் சென்னை மாநிலகல்லூரியில் தமிழை பயிற்றுவித்து வருகின்றேன். என்துணைவி சுபத்திராமறைமலை சென்னை காயிதேமில்லத் அரசு மகளிர் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். எங்கள் புதல்வி திருமதி நீலமலர் அண்ணா பல்கலைக் கழகத்தில் உற்பத்தி பொறியியல் துறையில் (Production Engineer) விரைவுரையாளராகப் பணிபுரிந்து கொண்டே பிஎச்டி பட்டத்திற்கான ஆய்வையும் செய்து வருகின்றார். நான்காவது திரு.இ. திருவள்ளுவன் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறையில் துணை இயக்குநராகப் பணிபுரிந்து வருகின்றார்.

இவரது புதல்வி செல்வி. ஈழமலர், செல்வன் ஈழக்கதிர் தமிழ் வழிப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். மூன்றாவது மகன் இ. திருவேங்கடன் ஐந்தாவது மகன் இ. நல்லபெருமாள் ஆகிய இருவரும் வணிகம் புரிந்து வருகின்றார். ஆறாவது மகன் திரு. இ. அம்பலவாணன் திருச்சியில் தனியார் தொண்டு நிறுவனம் ஒன்றில் சமுதாயப் பணியாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இவரது துணைவி முனைவர். திருமதி மணிமேகலை திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். புதல்வியருள் மூத்தவரும் நான்கு சகோதரிக்கும் இளைவருமாகிய திருமதி. மனோகரன் தொடர்வண்டிக் காவல்துறையில் துணைக் கண்காணராக பணியாற்றி வருகின்றார். இவர்களின் இரட்டைப் புதல்வியர் செல்வி இலக்குவச் செல்வி பொறியியல் கல்லூரியிலும் செல்வி. மனோன்மணி மருத்துவக் கல்லூரியிலும் பயின்று வருகின்றனர். புதல்வியருள் இரண்டாமவர் மருத்துவர் திருமதி. இ. செல்வமணி எம்டிடிபிஎம். மதுரையிலேயே புகழ்வாய்ந்த மனநல மருத்துவராவார். இவரது துணைவர் தினகரன் வழக்கறிஞர் ஆவார். திருமதி அங்கயற்கன்னியரின் துணைவர் திரு. தியாகராசன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பொறியாளராகப் பணியாற்றுகிறார். திருமதி. அருட்செல்வியின் துணைவர் திரு. தில்லை நாயகம் மதுரையில் செல்வாக்குப் பெற்ற வழக்கறிஞராகவும், பொதுநலத் தொண்டராகவும் விளங்கி வருகின்றார். சுருக்கமாகச் சொன்னால் எங்கள் குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் எனலாம். இதன் தலைவராக விளங்கிய என் தந்தையாரும் தலைவியாக விளங்கிய என் தாயாரும் பெற்ற மக்களையும் பேரன், பெயர்த்தியரையும் சீராட்டிப் பராட்டும் வகையில் எங்களுடன் இப்பொழுது இல்லையென்பது தான் மனத்திற்குச் சோர்வூட்டுகின்றது. எம் சின்னத் தலைவியாகிய எங்கள் சின்னம்மா எங்களுடன் இருப்பது ஓரளவு அந்தச் சோர்வைப் போக்க உதவுகிறது. எனலாம். – (வளரும்)

அன்பு இல்லாவிட்டால், உலகம் ஒரு சாக்காடு – பிரவுனிங்